9th August 1966]

Oil exploration

* 295 *Q.*—SRI M. KALYANASUNDARAM : SRI K. S. MANI : } Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the details of the present stage of oil exploration in Cauvery Delta; and

(*b*) the results of investigation so far made?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) & (இ) எண்ணெய், இயற்கை வாயுக் கமிஷன், எண்ணெய் இருக்குமிடத்தை கண்டு பிடிப்பதற்காக, டிரில்லிங் பணியை முதன் முதலில் பட்டுக்கோட்டைப் பகுதியில் 1963-ம் ஆண்டில் துவக்கியது. இங்கு இரு கிணறுகள் அமைக்கப்பட்டன. இக்கிணறுகளிலிருந்து பூமிக்கடியில் உள்ள மண் அடுக்குகளின் அமைப்பு, அவற்றின் வயது, நிலைமை முதலியவை குறித்த புவியியல் சம்பந்தமான தகவல்களைக் கணிசமான அளவில் தெரிந்து கொள்ள முடிந்தது. மூன்ருவது கிணறு திருப்பூண்டி அருகே 1,141 மீட்டர் ஆழத் திற்கு அமைக்கப்பட்டது. பூமிக்கடியில் நீரகக் கரிமம் இருப் பதற்கான நேரடியான அறிகுறிகள் எதுவும் இக்கிணறுகள் மூலம் காணப்படவில்லை. பூமிக்கடியில் உள்ள மண் அடுக்குகள் பற்றி மேற்கொண்டும் தகவல்கள் சேகரிப்பதற்காக காவிரி சங்க முகத்தில் தஞ்சாவூர், கந்தர்வக்கோட்டை முதலிய இடங்களின் அருகே மேலும் சில கிணறுகள் அமைக்க கமிஷன் உத்தேசித் துள்ளது. காரைக்கால் பகுதியில் தோண்டியுள்ளதைப்போலவே இதுவரையில் இரண்டு ஆழமான கிணறுகள் துளையிடப் பட்டுள்ளன. முதல் கிணறு தஞ்சாவூர் மாவட்டத்தில் திட்டச்சேரி கிராமத்தின் அருகே 1,770 மீட்டர் ஆழத்திற்குத் துளையிடப் பட்டது. இச்சங்கமுகத்தில் நீரகக் கரிமம் இருப்பதற்கான அறி குறிகள் இக் கிணற்றின் மூலம் காணப்பட்டன. இரண்டாவது ஆழமான கிணறு புதுச்சேரி மாநிலத்தில் நிரவி கிராமத்தின் அருகே 1,704 மீட்டர் ஆழத்திற்குத் துளையிடப்பட்டது மூன்ருவது ஆழமான கிணறு நாகூருக்கு வடக்கே துளையிடப்பட்டு வேலை நடந்தேறி வருகிறது. இப்பகுதியில் எண்ணெய் எடுத்துச் சேகரிப் பதற்கான நிலைமை சாதகமாக உள்ளது என்று இதுவரை சேகரித் துள்ள தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

திரு. வை. சங்கரன் : எண்ணெய் எடுப்பதற்குத் துளைபிடும் கருவிகளும் மற்ற சாதனங்களும் 'மாடர்னைஸ்டு' ஆக இல்லை. தாமதத்திற்கு அதுவும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறதே, அது வாஸ்தவமா? அப்படியென்ருல், ட்ரில்லிங் மெஷினரி போன்ற வற்றை மாடர்னைஸ்டாக வாங்கி உபயோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இருக்கும் மெஷினரிகளை வைத்து வேலைகளெல்லாம் நடந்துகொண்டிருக் கின்றன. இவை சரியாக இல்லை, போதவில்லை என்கிற தகவல் என்னிடம் இல்லை.

[9th August 1966

திரு. சா. கணேசன் : காரைக்கால்-நாகப்பட்டினம் சாலையில் உள்ள எண்ணெய்ச் சோதனைச்சாலையில் எந்த அளவிலே வேலை முடிந்திருக்கிறது, பயன் எவ்வளவு கிடைக்கும் என்று கணிக்கப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Two deep wells have so far been drilled on the Karaikal structure. The first well was drilled to a depth of 1,770 metres near village Thittachery, Tanjore district and it gave indications of the presence of hydrocarbons in this basin. The second deep well was drilled near village Niravi of Pondicherry State, to a depth of 1,704 metres.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தினுடைய கடற்கரைப் பகுதி எண்ணெய் வள ஆராய்ச்சியில் ரஷ்யக் கப்பல்கள் ஐக்கிய நாட்டு உதவியின் பேரில் ஈடுபட்டிருந்ததாகச் செய்தி வந்ததே, அதுபற்றித் தகவல் ஏதாவது உண்டா ? விவரங்கள் கிடைத்தனவா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : தற்போது இங்கே அதைப்பற்றிய விவரம் ஒன்றும் இல்லை.

கட்டாயச் சேம நிதி

* 296 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: } கனம் தல
திரு. ஆ. தங்கவேலு :
நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) யுத்தகாலத்தில் கட்டயா சேமிப்பு நிதியாக ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளிடம் வசூலான தொகை எவ்வளவு ?

(இ) அத்தொகையைத் திரும்பக் கொடுத்துவிடும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்களா ?

(உ) அத்தொகை முழுமையும் திரும்பக் கொடுக்கப்பட்டு விட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஸ்தல ஸ்தாபன ஊழியர் களிடமிருந்து பிப்ரவரி 1963 முதல் மார்ச்சு 1966 வரை கட்டாய சேமிப்பு நிதியாக ரூ. 1,77,29,456.88 வசூல் செய்யப்பட்டது.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கட்டாய சேமிப்பு நிதியை திரும்பக் கொடுக்கிறபோது, சர்க்காரின் பங்குத் தொகையையும் அதோடு சேர்த்துக் கொடுப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : "திருப்பிக் கொடுக்கவில்லை" என்றுதான் நான் பதிலளித்தேன். சிப்பந்திகள் ரிடையர் ஆகும் போது பென்ஷன் வாங்கும் சமயத்திலோ அல்லது இறந்ததற்குப்